# சட்டப்பேரவையில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் குற்றச்சாட்டு...!

5ஆம் பக்கத் தொடர்ச்சி...

ஆனால் அந்த நம்பிக்கையை உச்சநீதிமன்றம் இறுதித் தீர்ப்பை அளிக்கும் வரையில் மட்டுமல்ல, அதன் பிறகு கூட அம்மாநிலம் நமக்கு அளிக்கவில்லை.

**“பேச்சுவார்த்தை” என்ற அத்தியாயத்தை உச்சநீதிமன்றம் முடித்து வைத்துள்ளது!**

எனவேதான் “பேச்சுவார்த்தை” என்ற அத்தியாயம் ஏற்கனவே உச்ச நீதிமன்ற இறுதித் தீர்ப்பால் முடித்து வைக்கப்பட்டு விட்டது என்பதைத் தான் இந்த மன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இனி காவிரி மேலாண்மை ஆணையம் சொல்வதை இரு மாநில நல்லுறவுகள் அடிப்படையில் கர்நாடகம் கேட்க வேண்டும் என தமிழ்நாட்டு விவசாயிகளும் எதிர் பார்க்கிறார்கள். இங்கு இருக்கும் ஆளுங்கட்சியும், எதிர் வரிசையில் உள்ள பிரதான எதிர்கட்சி உள்ளிட்ட அனைத்துக் கட்சிகளும் கருதுகின்றன.

இந்தச் சூழ்நிலையில் “பேச்சு வார்த்தை” எனப் புறப்படுவது, நமக்குள்ள காவிரி நதிநீர் உரிமையை மீண்டும் பேச்சுவார்த்தை வரம்பிற்குள் கொண்டு வருவதாகும். அது நம் விவசாயிகளுக்கும் நல்லதில்லை. நாம் பெற்ற உரிமைகளுக்கும் நல்லதல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**மேகதாது அணை: மூன்று நிபந்தனைகள்!**

காவிரி நீர் போல் இன்னொரு அச்சுறுத்தல் மேகதாது அணை. இந்த அணையைக் கட்ட இதுவரை ஒன்றிய அரசு அனுமதி கொடுக்கவில்லை. இங்கே ஆட்சிப் பொறுப்பில் இருந்த திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும், அ.தி.மு.க. வாக இருந்தாலும் காவிரிப் பிரச்சினையில் சட்டரீதியாக தமிழ்நாட்டின் உரிமையை பாதுகாக்கவே போராடி வந்திருக்கிறோம். த.வெ.க. அரசும் அந்த திசையில்தான் பயணிக்கும் என நம்புகிறேன்.

மேகதாது அணைக் கட்டுவதற்கு இன்று நேற்றல்ல, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலிருந்து எதிர்த்து வந்திருக்கிறோம். இதே அவையில் தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறோம்.

இவ்வளவுக்கும் பிறகு கர்நாடக மாநிலம் மேகதாது அணை கட்ட “விரிவான திட்ட அறிக்கை” தயாரிக்கலாம் என 2018இல் ஒன்றிய நீர்வளத்துறை அணையம் அனுமதியளித்தது. ஆனால் அது Blanket Permission அல்ல. மூன்று நிபந்தனைகளை விதித்தது. 22.11.2018 கடிதத்தை எடுத்து படித்துப் பார்த்தால் உங்களுக்கு எல்லாம் தெரியும்.

முதல் நிபந்தனை: தமிழ்நாடு அரசின் நிபந்தனைகளை DPR தயாரிக்கும் போது பரிசீலனையில் கர்நாடகம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இரண்டவது நிபந்தனை: மத்திய மின்சார வாரியம், சம்பந்தப்பட்ட மாநிலத்தில் உள்ள காவிரி மேலாண்மை ஆணைய அலகு ஆகியவற்றுடன் கலந்து ஆலோசித்து இந்த DPR தயாரிக்க வேண்டும்.

மூன்றாவது நிபந்தனை: இப்படி கர்நாடகம் தயாரிக்கும் “விரிவான திட்ட அறிக்கை”யை பரிசீலனை செய்வதற்கு, காவிரி மேலாண்மை ஆணையத்தின் ஒப்புதல் முக்கியம். அதாவது இந்த ஒப்புதல் “Pre requisite” (முன்கூட்டிய தேவை) எனத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

நிபந்தனைகளுடன் DPR தயாரிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாலும், ஒன்றிய நீர்வளத்துறை ஆணையம் ஒரு Expert Body என்பதாலும், இப்போதைக்கு உச்சநீதி மன்றம் தலையிட விரும்பவில்லை எனக் கூறியது.

அது மட்டுமின்றி, இந்த நிபந்தனைகளை மீறி மேகதாது அணைக் கட்ட DPR தயாரிக்கப்பட்டால், “Parties would be at liberty to take such steps as permissible in law” என்ற ஒரு rider உடன்தான் உச்சநீதிமன்றம் தமிழ்நாட்டின் கோரிக்கையின் மீது Directions கொடுக்க மறுத்துள்ளதே தவிர,

தமிழ்நாடு சார்பில் சரியான முகாந்தி ரங்களை வைத்து வாதாடவில்லை என்றோ, தமிழ்நாட்டின் கோரிக்கையில் நியாயமில்லை என்றோ கூறவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கர்நாடகம் தயாரித்த DPR உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி இல்லை என்பதால், அதையே ஒன்றிய நீர்வளத்துறை ஆணையம் கர்நாடக அரசுக்கு திருப்பி அனுப்பி விட்டது.

**கர்நாடக அரசின் கரத்தை வலுப்படுத்த வேண்டாம்!**

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இருந்த வரை மேகதாது அணை கட்ட விரிவான திட்ட அறிக்கை அனுமதிக்கப்படவில்லை என்பதுதான் நிலைமை.

அதனால்தான் தேர்தலுக்கு முன்பு, அதாவது கடந்த 4.3.2026 அன்று மேகதாது அணை பிரச்சினையில் நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் எனக் கோரிக்கை வைத்தோம்.

இந்த அரசு கொண்டு வந்த தீர்மானத்திலும் அதை திருத்தமாக எதிர் கட்சித் தலைவர் அவர்கள் அளித்து, அதுவும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஆகவே மேகதாது அணை தொடர்பாக தமிழ்நாடு அரசின் மனு தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றெல்லாம் பேசி, கர்நாடக அரசின் கரத்தை வலுப்படுத்த வேண்டாம்.

எப்போது கர்நாடக அரசு DPR தயாரிக்க முன்வந்தாலும், தி.மு.க. ஆட்சியில் பெறப்பட்ட உச்சநீதிமன்றத் தீர்ப்பை கடைப்பிடித்தே ஆக வேண்டும். இதுதான் சட்ட நியதி என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தேர்தல் ஜனநாயக வரலாற்றில் தமிழ்நாடு சட்டமன்றம் புகழ் மிக்கது. நூற்றாண்டு கண்ட இச்சட்டமன்றத்தின் உறுப்பினர்களாக நாம் எல்லாம் இருப்பது பெருமைமிக்கது.

நான் இந்த அவையின் உறுப்பினராக முதலில் நுழைந்த 2001 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை, இச்சட்டமன்ற உறுப்பினர் என்பதை நாட்டின் எந்த மூலை முடுக்கிற்குப் போனாலும், பெருமிதத்துடன் கூறிக்கொள்ள முடிகிறது.

அத்தகைய சிறப்பு வாய்ந்த சட்டமன்றத்தில், குறிப்பாக இந்த 17 ஆவது சட்டமன்றத்தில் சீனியர்களான நாங்கள் இடம் பெற்றிருக்கிறோம் என்றால், எண்ணற்ற இளைஞர்களும் வந்திருப்பது நம் ஜனநாயகத்தின் இளமையைக் காட்டுகிறது.

இளமையான ஜனநாயகம் துடிப்புமிகு ஜனநாயகமாக இருக்க, ஆரோக்கியமான விவாதத்திற்காக, கருத்துமிக்க கலந்துரையாடலுக்காக நமக்கு எல்லாம் சட்டமன்ற விதிகளைத் தொகுத்து தந்திருக்கிறார்கள்.

நம்மையெல்லாம் வழிநடத்திச் செல்வதற்காக பேரவைத் தலைவர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அந்த விதிகளிலேயே, தனிப்பட்ட குற்றச்சாட்டுகளோ அல்லது அவதூறான வார்த்தைகளோ இருக்கக் கூடாது என்பது ஒரு விதி. நீதி விசாரணையில் இருக்கும் எப்பொருளின் மீதும் கருத்தை சொல்லவோ அல்லது அப்பொருள்பற்றிக்குறிப்பிடவோ கூடாது. பேரவைக்கு ஒவ்வாத பயன்படுத்தக்கூடாத சொற்களை பயன்படுத்தக் கூடாது.

செய்தித்தாள் அடிப்படையாக வைத்து, பேரவைத் தலைவரின் அனுமதியின்றி பேசக்கூடாது. இவை வெறும் சாம்பிள்கள். நாம் அனைவரும் சட்டமன்ற உறுப்பினராக பொறுப்பேற்ற தினத்திலேயே இச்சட்டப் பேரவையின் விதிகள் அடங்கிய புத்தகம் கொடுக்கப்படும். அப்படியொரு புத்தகம் இங்கே இளைஞர்களாக அமர்ந்திருக்கும் உறுப்பினர்கள் கைகளுக்கும் வந்து சேர்ந்திருக்கும்.

அந்த 292 விதிகள் கொண்ட “தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகள்” தான் நமக்கு எல்லாம் இங்கு இருக்கும் தலைவர். அதன் கீழ்தான் பேரவைத் தலைவர் நம்மையெல்லாம் வழிநடத்திச் செல்கிறார்.

ஆகவே மூத்த உறுப்பினர் என்ற முறையில் நான் சொல்லிக் கொள்வது, இது பாரம்பரியமிக்க சட்டமன்றம்.

அதன் பழம்பெருமையை, ஜனநாயகத்தைத் தாங்கி நிற்கும் அந்த தூணை, ஆரோக்கியமான விவாதங்கள் மூலம் முன்னெடுத்து, வெளி உலகில் புகழ் சேர்க்க வேண்டும் என்று கேட்டு அமைகிறேன்.

இவ்வாறு முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் பேசினார்.

# தமிழ்நாட்டில் கால்நடை உள்கட்டமைப்பு வலுப்படுத்தப்படுமா?

## மக்களவையில் – சி.என்.அண்ணாதுரை கேள்வி!



புதுடெல்லி, ஆக. 14 –

தமிழ்நாட்டில் கால்நடை உள்கட்டமைப்பினை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா? அப்படி எனில் அது குறித்து விவரம் தர வேண்டும் என்று மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை கேள்வி கேட்டிருந்தார்.

கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை இது குறித்து கேட்ட கேள்வி வருமாறு : –

மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் பின்வருவனவற்றை விளக்கக் கோருகிறோம்: கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டில் கால்நடை மேம்பாட்டை ஊக்குவிக்கவும், சுகாதார சேவைகளை வலுப்படுத்தவும் தேசிய கால்நடை மிஷன் மற்றும் கால்நடை ஆரோக்கியம் மற்றும் நோய் கட்டுப்பாட்டு திட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கைகள்.

இதே காலகட்டத்தில் தேசிய விலங்கு நோய் கட்டுப்பாட்டு திட்டம், விலங்கு நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கான மாநிலங்களுக்கான உதவி, நடமாடும் கால்நடை வாகனங்கள் மற்றும் கால்நடை மருத்துவமனைகளை வலுப்படுத்துதல் ஆகியவற்றின் கீழ் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்ட உதவிகளின் விவரங்கள்.

தமிழ்நாட்டில் மாவட்டம் வாரியாக தடுப்பூசி போடப்பட்ட கால்நடைகள், பயன்படுத்தப்பட்ட நடமாடும் கால்நடை வாகனங்கள் மற்றும் வலுப்படுத்தப்பட்ட கால்நடை உள்கட்டமைப்பு விவரங்கள்.

நோய் கண்காணிப்பை மேம்படுத்தவும், கால்நடை ஆரோக்கியம் மற்றும் இனப் பெருக்க உற்பத்தியை அதிகரிக்கவும் அரசு எடுத்த நடவடிக்கைகள்.

இத்திட்டங்களை விரிவுபடுத்தவும் தமிழ்நாட்டின் கால்நடை உள்கட்டமைப்பை வலுப்படுத்தவும் அரசிடம் ஏதேனும் திட்டங்கள் உள்ளதா, அதன் விவரங்கள் என்ன?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார். அதற்கு ஒன்றிய மீன்வளத்துறை அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் பதில் வருமாறு:

மாநிலங்களுக்கு ரூ. 2,023.84 லட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. ii. விலங்குகளை அடையாளம் காண்பதற்காக மொத்தம் 61.88 லட்சம் பெரிய அளவிலான காது வில்லைகளும் மற்றும் 144.58 லட்சம் சிறிய அளவிலான காது வில்லைகளும் வழங்கப்பட்டுள்ளன.

245 நடமாடும் கால்நடை மருத்துவ பிரிவுகளை கொள்முதல் செய்வதற்கும் இயக்குவதற்கும் ரூ. 7,565.36 லட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. கால்நடை ஆரோக்கியம் சார்ந்த மாநில முன்னுரிமை நடவடிக்கைகளை செயல்படுத்துவதற்காக ரூ. 1667.01 லட்சம் தொகை வழங்கப்பட்டுள்ளது.

விலங்கு நோய்களைக் கண்காணிக்கும் பணியை மேற்கொள்கிறது. இந்திய அரசின் கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறையின் பாரத் பசுதன் போர்ட்டலின் உதவியுடன் விலங்கு நோய்களைக் கண்காணிக்கும் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. பெங்களூருவில் உள்ள ICARNIVEDI நிறுவனம், NADRES 2.0 மூலம் சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்பே மாவட்ட அளவில் சாத்தியமான விலங்கு நோய் அபாயத்தை கணித்து கூறுகிறது. ராஷ்டிரிய கோகுல் மிஷன் (RGM) என்பது உள்நாட்டு மாட்டு இனங்களின் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பிற்காகவும், கால்நடைகளின் மரபணு மேம்பாடு, பால் உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காகவும் செயல்படுத்தப்படுகிறது. பாலினம் பிரிக்கப்பட்ட விந்து மற்றும் இன்விட்ரோ கருத்தரித்தல் (IVF) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி நாடு தழுவிய செயற்கை முறை கருத்தூட்டல் திட்டம், மரபணு தேர்வுக்கான ஜெனோமிக் சிப் (Genomic chip), சந்ததி சோதனை மற்றும் பெடிகிரி தேர்வு திட்டம் மற்றும் பல்துறை செயற்கை முறை கருத்தூட்டல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு (MAITRIs) பயிற்சி அளித்தல் ஆகியவை இதன் முக்கிய கூறுகளாகும்.

vii. தனிநபர் தொழில்முனைவோர், தனியார் நிறுவனங்கள், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் (MSME), விவசாய உற்பத்தியாளர் அமைப்புகள் (FPOs), பிரிவு 8 நிறுவனங்களுக்கு உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக 3% வட்டி சலுகை வழங்கப்படுகிறது.(e) கால்நடை பராமரிப்பு என்பது ஒரு மாநிலப் பட்டியலின் கீழ் உள்ள துறையாகும். இருப்பினும், (a) முதல் (d) வரை மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து திட்டங்களும் இந்திய அரசின் கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறையால் தமிழ்நாடு உட்பட நாடு முழுவதும் கால்நடை பராமரிப்பு, கால்நடை உற்பத்தித்திறனை அதிகரிக்கவும் விவசாயி களின் வருமானத்தை உயர்த்தவும் செயல்படுத்தப்படுகின்றன.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.

### குழந்தைகளுக்காக வடிவமைக்கப்பட்ட

# மொபைல் செயலிகளில் பாலியல் விளம்பரங்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

## மாநிலங்களவையில் – கவிஞர் சல்மா கேள்வி!



புதுடெல்லி, ஆக. 14 –

குழந்தைகளுக்காக வடிவமைக்கப்பட்ட மொபைல் செயலிகளில் பாலியல் விளம்பரங்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்று நாடாளுமன்ற மாநிலங்களவையில் கழக உறுப்பினர் கவிஞர் சல்மா கேள்வி எழுப்பினார்

இது குறித்து அவர் எழுப்பிய கேள்வி வருமாறு; –

குழந்தைகளுக்காக வடிவமைக்கப்பட்ட மொபைல் செயலிகளில் Sexually Explicit விளம்பரங்கள் இடம்பெறுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா;

இத்தகைய வெளிப்படையான உள்ளடக்கங்களுக்கு குழந்தைகள் ஆளாகாமல் தடுப்பதற்காக, Google Play Store, Apple App Store மற்றும் App Developers உள்ளிட்ட சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு அரசு வழங்கியுள்ள குறிப்பிட்ட வழிமுறைகள் மற்றும் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை; மற்றும்

Child Sexual Abuse Material CSAM அகற்றுவதை உறுதி செய்வதற்காக அரசு மேற்கொண்டுள்ள குறிப்பிட்ட நடவடிக்கைகள் யாவை.

இதற்கு ஒன்றிய அமைச்சர் அளித்த பதில் வருமாறு;–

அரசின் கொள்கைகள், குழந்தைகள் உட்பட அனைத்து இணையப் பயனர்களுக்கும் திறந்த, பாதுகாப்பான, நம்பகமான மற்றும் பொறுப்புக்கூறலுடன் கூடிய இணையச் சூழலை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000 (IT Act) மற்றும் தகவல் தொழில்நுட்பம் (இடைநிலையர்கள் வழிகாட்டுதல்கள் மற்றும் டிஜிட்டல் ஊடக நெறிமுறைகள்) விதிகள், 2021 (IT Rules) ஆகியவை இணைந்து, டிஜிட்டல் தளங்களில் சட்டவிரோதமான மற்றும் தீங்கு விளைவிக்கும் உள்ளடக்கங்களை கையாள்வதற்கான கடுமையான சட்டக் கட்டமைப்பை உருவாக்கியுள்ளன.

குழந்தைகளுக்கான சமூக ஊடகங்கள் மற்றும் மொபைல் செயலிகளில் CSAM

இந்தத் தளங்களில் குழந்தைகள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுவது தொடர்பான உள்ளடக்கம் (Child Sexual Abuse Material CSAM) இடம் பெற்றதாக சமீபத்தில் வெளியான செய்திகளை இந்திய அரசு தீவிரமாகக் கவனத்தில் கொண்டுள்ளது. இதுகுறித்து சம்பந்தப்பட்ட தளங்களுக்கு உடனடி திருத்த திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவிப்புகள் அனுப்பப்பட்டுள்ளன.

தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையமும் (NCPCR) இந்த சமூக ஊடகத் தளங்களுக்கு அறிவிப்புகளை அனுப்பியுள்ளது.

**சட்டக் கட்டமைப்பு!**

IT Act மற்றும் IT Rules இணைந்து, டிஜிட்டல் நலன், பயனர் பாதுகாப்பு மற்றும் பொறுப்பான டிஜிட்டல் பங்கேற்பை உறுதி செய்வதற்கான சட்டக் கட்டமைப்பை ஏற்படுத்தியுள்ளன.

**தகவல் தொழில்நுட்பச் சட்டம், 2000**

IT Actன் கீழ் பல்வேறு வழங்கப்பட்டுள்ளன. இணையக் குற்றங்களுக்கு தண்டனைகள் அவற்றில்:

- அடையாளத் திருட்டு பிரிவு 66C
- ஆள்மாறாட்டம் பிரிவு 66D
- தனியுரிமை மீறல் பிரிவு 66E
- ஆபாச அல்லது பாலியல் வெளிப்படையான உள்ளடக்கத்தை வெளியிடுதல் அல்லது பரப்புதல் பிரிவுகள் 67, 67A மற்றும் 67B ஆகியவை அடங்கும்.

மேலும், பிரிவுகள் 78 மற்றும் 80 காவல்துறைக்கு இத்தகைய குற்றங்களை விசாரிப்பதற்கான அதிகாரத்தை வழங்குகின்றன.

**கல்வித் துறையில் நடவடிக்கைகள்**

கல்வி அமைச்சகம் 2020 ஜூலையில் PRAGYATA Digital Education Guidelines வெளியிட்டது. இது பாதுகாப்பான மற்றும் பயனுள்ள இணையவழிக் கல்விக்கான கட்டமைப்பை வழங்குகிறது. மாணவர்களின் நலன் மற்றும் சமூக ஊடகங்கள் மற்றும் மின்னணு சாதனங்களை பொறுப்புடன் பயன்படுத்துவதற்கும் இது முக்கியத்துவம் அளிக்கிறது.

CBSE, டிஜிட்டல் ஒழுக்கம் (Digital Etiquette) தொடர்பான வழிகாட்டுதல்கள், ஆசிரியர்களுக்கான சைபர் பாதுகாப்புப் பயிற்சி, Cyber Security Handbook வெளியீடு மற்றும் இணையப் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த பள்ளிகளில் Cyber Clubs அமைப்பதற்கான அறிவுறுத்தல்கள் மூலம் இந்த முயற்சிகளுக்கு கூடுதல் ஆதரவு அளித்துள்ளது.

NCERT தனது பாடத்திட்டத்திலும் சைபர் பாதுகாப்பை இணைத்துள்ளது. இதில் XI மற்றும் XII வகுப்புகளுக்கான ”Societal Impacts என்ற பாடப்பகுதியும் அடங்கும். மேலும், CIETNCERT, சைபர் பாதுகாப்பு தொடர்பான கல்வி வளங்களை உருவாக்கி பரப்பியுள்ளது.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் பதிலளித்தார்.

### கடலோரக் கப்பல் போக்குவரத்து, சொகுசுக் கப்பல் சுற்றுலாவை அரசு ஊக்குவிக்கிறதா?

# சரக்கு, பயணிகள் போக்குவரத்து விவரங்கள், எதிர்கால விரிவாக்கத் திட்டங்கள் என்ன?

## மாநிலங்களவையில் – கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கேள்வி!



நாமக்கல், ஆக.14–

டெல்லியில் நடைபெற்று வரும் நாடாளுமன்ற மாநிலங்களவை மழைக்கால கூட்டத் தொடரில், கே.ஆர்.என். இராஜேஸ்குமார் கலந்து கொண்டு

கடலோரக் கப்பல் போக்குவரத்து, சொகுசுக் கப்பல் சுற்றுலா மற்றும் சரக்கு, பயணிகள் போக்குவரத்து விவரங்கள், எதிர்கால விரிவாக்கத் திட்டங்கள் குறித்து கேள்வி எழுப்பினார்.

கடலோரக் கப்பல் போக்குவரத்து மற்றும் சொகுசுப் பயணக் கப்பல் சுற்றுலா ஆகியவை அரசால் ஊக்குவிக்கப்படுகின்றனவா? அவை குறித்த விவரங்கள் என்ன? என அவர் கேள்வி எழுப்பினார். மேலும், இத்துறைகளின் கீழ் இதுவரை கையாளப்பட்ட சரக்கு மற்றும் பயணிகள் போக்குவரத்து குறித்த விவரங்களையும், அரசின் எதிர்கால விரிவாக்கத் திட்டங்கள் குறித்தும் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்து பேசிய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துறை அமைச்சர் சர்பானந்த சோனோவால், அரசு கடலோரக் கப்பல் போக்குவரத்து மற்றும் சொகுசுப் பயணக் கப்பல் சுற்றுலாவை ஊக்குவித்து வருகிறது. அரசு எடுத்துள்ள பல்வேறு நடவடிக்கைகள் குறித்த விவரங்கள் இணைப்பு 1 இல் உள்ளன. சரக்கு போக்குவரத்து மற்றும் சொகுசுப் பயணக் கப்பல் பயணிகள் போக்குவரத்து குறித்த விவரங்கள் அதில் இடம் பெற்றுள்ளது.

2047ஆம் ஆண்டிற்குள் உள்நாட்டு நீர்வழிகள் மற்றும் கடலோரக் கப்பல் போக்குவரத்தின் பங்களிப்பை 6%லிருந்து 12%ஆக உயர்த்தும் வகையில், 2026ஆம் ஆண்டு மத்திய பட்ஜெட்டில் ‘கடலோரச் சரக்கு போக்குவரத்து ஊக்குவிப்புத் திட்டம்’ (Coastal Cargo Promotion Scheme) அறிமுகப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

QR அடிப்படையிலான குடியேற்ற அனுமதி அமைப்பு (Immigration Clearance System) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதில் பயணத்தின்போதே குடியேற்ற அனுமதி பெறும் வசதியும் உள்ளதால், ஒரு பயணியின் குடியேற்ற அனுமதி நேரம் சுமார் 30 வினாடிகளாகக் குறைக்கப்பட்டுள்ளது. சொகுசுப் பயணக் கப்பல் பயணிகள் மற்றும் அவர்களின் உடைமைகளுக்கான சுங்க அனுமதி நடைமுறையில், ‘வணிகர் கூடுதல் நேரக் கட்டணம்’ (MOT) வசூலிப்பதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது (15.06.2026 தேதியிட்ட CBIC சுற்றறிக்கை); இது பயணிகளின் அனுமதியை விரைவாகவும் தடையின்றியும் மேற்கொள்ள உதவுகிறது. விரைவான சுங்க அனுமதியை எளிதாக்கும் வகையில், சொகுசுப் பயணக் கப்பல்களுக்கான டிஜிட்டல் மயமாக்கப்பட்ட சுங்க நடைமுறைகள் மற்றும் சுய அறிவிப்பு (selfdeclaration) முறை ஆகியவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.


viii. சொகுசுக் கப்பல்கள் மூலம் வரும் வெளிநாட்டு சுற்றுலாக் குழுக்களின் நுழைவை எளிதாக்குவதற்காக மின்குழு வருகை விசா அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சொகுசுக் கப்பல்களுக்கு உத்தரவாதமான நங்கூரமிடும் வசதி வழங்கப்படுகிறது, வெளியேற்றும் கட்டணங்கள் நீக்கப்பட்டு, சலுகையான சீரான கட்டண முறை வழங்கப்படுகிறது; மற்றும் x. வெளிநாட்டு சொகுசுக் கப்பல்களுக்கு கேபோடேஜ் கட்டணம் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என பதில் அளித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஏ.கே.ஜெகதீசன்

### ஆகஸ்ட் 14 (2020)



கழகம் தொடங்கப்பட்ட முதலே உறுப்பினராகிய மூத்த கழக முன்னோடியான இவர், வகுப்புவாரி உரிமை ரத்து செய்யப்பட்டபோது, சமூக நீதியின் போர்க்குரலாக சக மாணவர்களைத் திரட்டிப் போராடியவர்.

சேப்பாக்கம் பகுதிச் செயலாளர் – தலைமைச் செயற்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்பு வகித்தவர்.

பேரறிஞர் அண்ணா தலைமையில், தலைவர் கலைஞர் முன்னிலையில் கலைஞரின் “நச்சுக்கோப்பை” நாடகத்தை நடத்தி அதில் நடித்தவர். மிசா காலத்தில் கலைஞர் அவர்களுக்கு அவருக்கு உறுதுணையாக இருந்தார் என்பதற்காகவே போலீசாரால் கடுமையாகத் தாக்கப்பட்டதோடு, பொய் வழக்கில் கலைஞர் அவர்களுடன் கைது செய்யப்பட்டவர்.

1996ல் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராகவும் – 2001ல் மாநகராட்சியின் எதிர்க்கட்சித் துணைத் தலைவராக செயல்பட்டவர்.

2019ல் கழக முப்பெரும் விழாவில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களால், முத்தமிழறிஞர் கலைஞரின் “நெஞ்சுக்கு நீதி”யில் பாராட்டப்பட்டுள்ள இவருக்கு “கலைஞர் விருது” வழங்கி சிறப்பித்தார்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**